1980 பிப்ரவரி 4]

திரு. துரை மூத்துசாமி: * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் உட்காரு கிறீர்களா, இல்லையா? முதலில் பேரவையின் கண்ணியத்தைச் காப்பாற்றுங்கள்.

அண்ணா போக்குவரத்துக் கழகப் பேருந்துப் பயணச் சீட்டுகள்.

*வினா எண். 33— திரு. ப. சுந்தரம்: மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா :—

(அ) அண்ணா போக்குவரத்துக் கழகப் பேருந்து பயணச் சீட்டுகளில் அண்ணா உருவப் படத்தை அச்சடிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இது எப்போது முதல் செயல்படுத்தப் படும் ?

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவைச் செயலர்):

(அ) அண்டு (ஆ) அண்ணா உருவம் பொறிக்கப்பட்ட பயணச்சீட்டுக்களை அண்ணாவின் பிறந்த நாளாகிய 15—9—1979 முதல் அண்ணா போக்குவரத்துக் கழகம் உபயோகித்து வருகிறது.

பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தின் இராமநாதபுரம் பிரிவுப் பணியாளர்கள்.

*வினா எண். 34—திரு. த. இராமசாமி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் பிரிவில் பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தில் பணிபுரியும் தொழிலாளர்கள் 1977 மே மாதத்தி லிருந்து 1978 மே மாதம் வரை வேலைநீக்கம் செய்யப்பட்ட வர்கள் எத்தனை பேர்? ஊர் மாற்றம் செய்யப்பட்டவர்கள் எத்தனை பேர் ?

---

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.